மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 155/2024**

வா.சா. 1 ரவிச்சந்திரன், S/o வேல்ஸ்

நாள்: 18.03.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விவரம் தெரிவித்தது நான் தான் என்று சொன்னால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கானது எத்தனை சொத்துக்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் ஒரே ஒரு சொத்துக்காக தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1வது வழக்கு சொத்துக்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 288 அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 84 சென்ட். வேறு சொத்துக்களை காண்பித்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் இந்த ஒரு வழக்கு சொத்தை காண்பித்து மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) 1வது தபசில் 1 மற்றும் 2 இலக்கச் சொத்துக்களை நான் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் ராமசாமி என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். மேற்படி ராமசாமி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ள சங்கதிகளை வழக்குரையிலும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது தபசில் சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் அனுபவத்தை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு அருகே

1வது பிரதிவாதிக்குச் சொந்தமான 2வது தபசில் சொத்தும், 2வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 3வது தபசில் சொத்துக்களும் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

3) 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாய் மற்றும் மகன் உறவு முறை ஆவார்கள். 2 மற்றும் 3 இலக்கச் சொத்துக்களை 1வது பிரதிவாதி 17.10.2022 ஆவணம் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரையத்தின் அடிப்படையில் தான், 3 முதல் 6 பிரதிவாதிகளிடம் பட்டாசு ஆலை அமைப்பதற்கு அனுமதி கேட்டு மனு செய்தார் என்று சொன்னால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பட்டாசு ஆலை அமைப்பதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பம் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றும், எனக்கு அனுமதி கேட்ட விபரம் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது வழக்கு சொத்தானது என்னுடைய மனைவியின் பெயரில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான்.

4) சர்வே எண்கள் 279/2, 280/1, 2 மற்றும் 3 மற்றும் ஆகிய எண்களில் Venthan Fire Work Industries என்ற பெயரில் பட்டாசு தொழிற்சாலை அமைக்க மாவட்ட வருவாய் அலுவலரிடம் தடையில்லா சான்றிதழ் பெற்று தொழிற்சாலை அமைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சொத்துக்கு அருகில் பட்டாசு தொழிற்சாலை அமைக்கப்பட்டால் அருகில் உள்ள விவசாய நிலங்களில் தண்ணீர் ஆதாரம் பாதிக்கப்படும் என்பதை காண்பிக்க ஆய்வு சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் பட்டாசு தொழிற்சாலை அமைக்க அனுமதி கொடுத்த இடம் தரிசு நிலமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5) 3 முதல் 6 பிரதிவாதிகள் பட்டாசு தொழிற்சாலை வைக்க இடமானது தகுதியுடையதா என்பதை ஆய்வு செய்துதான் அனுமதி வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தல் என்று சொன்னால் சரிதான். பட்டாசு தொழிற்சாலை

அமைக்க ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் அற்று போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. அனுமதி அளித்த உத்தரவிற்கு எதிராக நான் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு